RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் அக்டோபர் 06 * 2025 * மலர் -1 * இதழ்-129 * VOL-1 * ISSUE-129 விலை ரூ.3 * பக்கம் -4

### மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் வாகனம் ஓட்டியதாக

# த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரசார பஸ் டிரைவர் மீது வழக்குப்பதிவு!

## கரூர் வேலாயுதம்பாளையம் போலீசார் நடவடிக்கை!!

**கரூர்,அக்.6–**

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பிரசார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் நாட்டையே உலுக்கியது. இந்த சூழ்நிலையில் அரசியல் கட்சிகள் நடத்தும் 'ரோடு ஷோ'வுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க வேண்டும், அதுவரை எந்த அரசியல் கட்சிகளுக்கும் 'ரோடு ஷோ' நடத்த அனுமதி அளிக்கக்கூடாது என உத்தரவிட வேண்டும் என்று சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த தினேஷ் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.செந்தில்குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. தொடர்ந்து நடந்த விசாரணையின்போது நீதிபதி, 'இந்த சம்பவத்தில் பலியானவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக தெரிவித்தார். பின்னர், 'கரூர் சம்பவம் தொடர்பான வீடியோக்களை பார்க்கும் போது வேதனை அளிக்கிறது. இந்த வழக்கில் த.வெ.க.வைச் சேர்ந்த 2 பேர் மட்டும் கைது செய்யப்பட்டு உள்ளனர். ஓரிரு நிபந்தனைகளை தவிர பெரும்பாலான நிபந்தனைகள் மீறப்பட்டு உள்ளதாகவே தெரிகிறது. கரூர் பிரசாரத்துக்கு சென்ற போது விஜய் பயணித்த பஸ் மோதி ஒரு விபத்து ஏற்பட்டதாக வீடியோக்கள் வெளியாகி உள்ளன. இதுதொடர்பாக தனியாக வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டு உள்ளதா?.



வழக்குப்பதிவு செய்ய போலீசாருக்கு என்ன தயக்கம்?. இந்த விவகாரத்தில் வழக்குப்பதிவு செய்யாவிட்டால் போலீசாரை மக்கள் எப்படி நம்புவார்கள்?. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கு போலீசார் கருணை காட்டுவதை ஏற்க முடியாது. விபத்து தொடர்பாக தனியாக வழக்குப்பதிவு செய்து, பிரசார வாகனத்தை பறிமுதல் செய்திருக்க வேண்டாமா?' என்றார். பின்னர், 'இந்த விவகாரத்தை கோர்ட்டு கண்மூடி வேடிக்கைபார்த்துகொண்டிருக்காது' என நீதிபதி கண்டனம் தெரிவித்தார். 'கலவரம் நடப்பது போல் நிகழ்ச்சியை நடத்தி உள்ளனர்.

அனைத்தையும் காவல் துறை அனுமதித்துள்ளது' எனக்கூறி அதிருப்தியை வெளிப்படுத்திய நீதிபதி, 'இந்த வழக்கில் காவல் துறை தரப்பில் வேறு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?' என கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்நிலையில் தவெக தலைவர் விஜய்யின் பிரசார வாகனத்தை பறிமுதல் செய்ய போலீசார் திட்டமிட்டிருந்தனர். இதன்படி பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பிரசார வாகனத்தை எந்த நேரத்திலும் போலீசார் பறிமுதல் செய்வார்கள் என்று தகவல் வெளியாகி இருந்தது. இதற்கான நடவடிக்கையில் போலீசார் இறங்கி உள்ளனர். அதற்கான ஆவணங்களையும், வீடியோ பதிவுகளையும் போலீசார் சேகரித்து வருகின்றனர்.

இந்நிலையில் த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரசார பஸ் மற்றும் அதன் ஓட்டுநர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். ஐகோர்ட்டின் உத்தரவை அடுத்து, இருசக்கர வாகனம் மீது மோதியது தொடர்பாக விஜய்யின் பிரசார பஸ் மற்றும் அதன் ஓட்டுநர் மீதும், இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற இருவர் மீதும், BNS 281 பிரிவில் மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் அல்லது மற்றவர்களுக்கு காயம் ஏற்படுத்தும் வகையில் அவசரமாக வாகனம் ஓட்டியதாக கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டி.டி.கே சாலை வீனஸ் காலனியில், சென்னை மாநகராட்சி சார்பில் 2.16 கிமீ நீளத்திற்குஅமைக்கப்பட்டுவரும் மழைநீர்வடிகால்வாய் பணிகள் மற்றும் சென்னைகுடிநீர்வாரியத்தின்சார்பில் 1.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள் விரிவாக்க பணிகளையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் மரு. எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி நகராட்சி, ஆவின் மேம்பாலம் அருகில் உள்ள டி.சி.ஆர். ஜங்சன் பேருந்து நிறுத்தம் அருகில், பெய்த கன மழை காரணமாக, மழை நீர் தேங்கியுள்ளதையடுத்து மழை நீரை வெளியேற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தேசிய நெஞ்சாலைத்துறை, நகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் உள்ளனர்.

## ஜியோஹாட்ஸ்டாரின் 'பிட்ச் டு கெட் ரிச்' – ஃபேஷனையும் தொழில் முயற்சியையும் இணைக்கும் புதிய ரியாலிட்டி ஷோ!

**சென்னை,அக்.6**

ஜியோஹாட்ஸ்டார், ஃபேஷன் ஆன்ட்ரப்ர்னர் ஃபண்ட் மற்றும் தர்மாடிக் என்டர்டெயின்மென்ட் இணைந்து தயாரித்துள்ள புதிய ரியாலிட்டி தொடரான 'பிட்ச் டு கெட் ரிச்', ஃபேஷன் மற்றும் தொழில்முனைப்பு உலகத்தை இணைக்கும் புதிய வடிவம் பெறுகிறது. வரும் அக்டோபர் 20 ஆம் தேதி முதல் ஜியோஹாட்ஸ்டார் ஸ்பெஷல்ஸில்பிரத்தியேகமாக ஒளிபரப்பாகும் இந்த நிகழ்ச்சி, 40 கோடி ரூபாய் முதலீட்டுடன் இந்தியாவின் அடுத்த தலைமுறை ஃபேஷன் தொழில்முனைவோருக்கு வணிக வாய்ப்புகளை வழங்குகிறது. இந்த நிகழ்ச்சி பற்றி தர்மாடிக் என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின்தலைமை நிர்வாக அலுவலர் அபூர்வா மேத்தா கூறுகையில், "'பிட்ச் டு கெட் ரிச்' என்பது கனவு காணும் தொழில்முனைவோரின் கதையாகும். இது ஃபேஷன், வணிகம் மற்றும் புதுமையை ஒன்றிணைக்கும் ஊக்கமளிக்கும் முயற்சியாகும்," என்றார். அதேபோல், ஃபேஷன் ஆன்ட்ரப்ர்னர் ஃபண்ட் நிறுவனர் சஞ்சய் நிகம் கூறுகையில், "'பிட்ச் டு கெட் ரிச்' என்பது 'மேக் இன் இந்தியா' முயற்சியை முன்னெடுத்து, ஃபேஷன் துறையில் திறமை சாலிகளுக்கு உண்மையான வணிக வாய்ப்புகளை வழங்குகிறது.



கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், வார்டு எண்.69க்குட்பட்ட அவினாசிலிங்கம் கல்லூரி அருகில் அமைந்துள்ள சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தில், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் சார்பில் (110 நபர்களுக்கு) தூய்மைப்பணியாளர்களுக்கு மதிய உணவினை வழங்கினார்கள். உடன் உதவி ஆணையர் செல்வி.நித்யா, மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன், சுகாதார ஆய்வாளர் சரவணக்குமார், நிர்வாகிகள் டாக்டர்.மோகன்குமார், சசிகுமார், SWMS ஒப்பந்த நிர்வாகி வெங்கடேஷ் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



மல்லசமுத்திரம்ஊராட்சிஒன்றியம்,அரசுஆண்கள்மேல்நிலைப்பள்ளியில்நடைபெற்ற நலம்காக்கும்ஸ்டாலின்திட்டமுகாமினைநாமக்கல்மாவட்டஆட்சித்தலைவர்துர்காமூர்த்தி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## ஜார்க்கண்ட் மாநில முன்னாள் உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் மு.கற்பக விநாயகம் அவர்களுக்கு உலக சாதனையாளர் விருது வழங்கப்பட்டது!

**சென்னை அக் 6,**

சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூலகம் அருகே உள்ள தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் ★நக்கீரர் தமிழ்ச் சங்கம்★ சார்பில் மகாத்மா காந்தி பிறந்த நாளை முன்னிட்டு மாணவர்கள் முன்னேற்றம் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. இந்த நிகழ்விற்கு நக்கீரன் தமிழ் சங்கத்தின் தலைவர் விழா வேந்தர் பாஸ்கரன் தலைமைவகிக்க, நக்கீரர் தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் செழியன் குமாரசாமி முன்னிலை வகித்தார்.



இந்த நிகழ்வில் மாண்புமிகு நீதியரசர், தமிழறிஞர் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலத்தின் உயர்நீதிமன்றத்தின் மேனாள் தலைமை நீதிபதி மு.கற்பக விநாயகம் அவர்களுக்கு உலக சாதனையாளர் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில் எண்ணற்ற பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு நீதி அரசர் மு.கற்பக விநாயகம் ஐயா அவர்களுடைய ஆற்றிய உரையை கேட்டு மகிழ்ந்தனர்.

பள்ளி அளவில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு நீதி அரசர் மு.கற்பக விநாயகம் ஐயா அவர்களும், உச்ச நீதி மன்ற மூத்த வழக்கறிஞர் டாக்டர் எஸ். வேலஸ்ரீ அவர்களும் கையெழுத்திட்ட சான்றுகளும் பதக்கங்களும் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த சான்றிதழ்கள், மாணவ மாணவியர் அனைவருக்கும் நீதியரசர் மு.கற்பக விநாயகம் அவர்கள் கைகளால வழங்கி சிறப்பித்தார். இந்த கருத்தரங்கில் உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் வேலஸ்ரீ அவர்களும் , கபாலீஸ்வரர்திருக்கோவில் இணை ஆணையாளர் க. வ.நிதா , ஆன்மீக நெறியாளர் ஸ்ரீ பரத் சுவாமி, அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் நிறுவனர் தலைவர் முனைவர் ஆர்.கே. குமார் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள். அகில இந்திய மக்கள் உரிமை மற்றும் சட்ட விழிப்புணர்வு ஒரு கழகத்தின் சார்பாக உலக சாதனையாளர் விருது பெற்ற மாண்புமிகு நீதியரசர் மு. கற்பக விநாயகம் அவர்களுக்கும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நக்கீரர் தமிழ் சங்கத்தின் தலைவர் வேந்தர் பாஸ்கரன் அவர்களுக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.







தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் .மு.பெ.சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி திருப்பூர் குமரன் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் மாநகராட்சி, இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் நினைவு மண்டபத்தில் அன்னரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வாரிசுதாரர்கள் ஆகியோர் உள்ளனர்.



### ராஜபாளையத்தில் நடைபெற்ற

# ராம்கோ தொழிலாளர்களுக்கான 44 வது ஆண்டு விளையாட்டு விழா!

ராஜபாளையம், அக்.6

ராஜபாளையம் ராம்கோ குருப் டெக்ஸ்டைல்ஸ் டிவிசன் தி ராமராஜூ சர்ஜிகல் காட்டன் மில்ஸ், சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ், சுதர்சனம் பேப்ரிக்ஸ், மற்றும் தரம் டெக்ஸ்டைல்ஸ் ஆகிய தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கான 44வது ஆண்டு விளையாட்டு விழா நிகழ்ச்சிகள் ஆலையின் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. விழாவிற்கு ராமராஜூ சர்ஜிக்கல் காட்டன் மில்ஸ் மேனேஜிங் டைரக்டர் என் ஆர் கே ராம்குமார் ராஜா தலைமை தாங்கினார். மேனேஜிங் டைரக்டர் நளினா ராமலட்சுமி சிறப்புரை ஆற்றினார். என். கே.ஸ்ரீகண்டன் ராஜா பி.ஏ. ராமசுப்பிரமணிய ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முதன்மை நிதிநிலை அதிகாரிவிஜய் கோபால் வரவேற்றார்.விழாவில் ஏ ஐ டி யு சி,எச் எம் எஸ், ஐ என் டி யு சி தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பல்வேறு நீண்ட கால சலுகைகள்பற்றிபேசினர்.மேலும் ஆலையில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தொழிலாளர்கள்குடும்பத்தினருடன் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

கடந்த ஆண்டில் ஆலையில் சிறந்த முறையில் பணியாற்றி 15 முதல் 35 வருடம் சர்வீஸ் பூர்த்தி செய்த தொழிலாளர்கள் , சென்ற ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய தொழிலாளர்கள் மற்றும் தொடர்ந்து விடுப்பு எடுக்காமல் பணியாற்றிய தொழிலாளர்கள் மேலும் சென்ற ஆண்டில் 295 நாட்களுக்கு மேல் பணியாற்றிய தொழிலாளர்கள் என சுமார் 1160க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. விழாவில் ராம்கோ குரூப் டெக்ஸ்டைல் டிவிசன் பிரசிடெண்ட்,மோகன் ரங்கன்இணை துணை தலைவர் சந்தோஷ் பொது மேலாளர் சுந்தரராஜ் நிர்வாக அதிகாரிகள்,அலுவலர்கள் ஊழியர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். விழாவின் முடிவில் தொழில்துறை உறவு மூத்த மேலாளர் ராம்குமார் நன்றி கூறினார்.



இராமநாதபுரத்தில்கைத்தறி,கைத்திறன்,துணிநூல்துறையின்மூலம்மாநில அளவிலானகைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வாடிக்கையாளர்களுக்கு முதல் விற்பனையை துவக்கி வைத்தார். உடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர்.வே.அமுதவல்லி,கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், , மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் .காதர்பாட்சா முத்துராமலிங்கம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.

# சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம் ஆயுத பூஜை கொண்டாட்டம்!

வத்தலகுண்டு,அக்.6

வத்தலகுண்டு அருகே உள்ள சேவுகம்பட்டி பேரூராட்சியில் மாதாந்திர கவுன்சிலர்கள் கூட்டம் மற்றும் ஆயுத பூஜை கொண்டாட்டம் நடைபெற்றது. முன்னதாக பேரூராட்சியில் உள்ள அனைத்து வாகனங்கள் மற்றும் அனைத்து கருவிகள் கணினி உள்பட பொருட்கள் வைத்து பூஜை செய்து கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் வனிதாதங்கராஜன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் தெய்வ ராணிவிஜி முன்னிலை வகித்தார்.செயல்அலுவலர் ரமேஷ்பாபு வரவேற்றார். இளநிலை உதவியாளர் அம்மமுத்து தீர்மானங்களை



வாசித்தார்.பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவர்கள் குறித்த விபரங்கள். ஆகஸ்ட் 2025 மாதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வரவு மற்றும் செலவின விபரம் மன்றத்தின் பார்வைக்கு. அரசு கள்ளர்மேல்நிலைப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். 13வது வார்டு நாகலாபுரத்தில் பம்ப் செட் மற்றும் பைப் லைன் உடன் கூடிய போர்வெல்,9வது வார்டு மயானம் மற்றும் 6வது வார்டு ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் மினி பவர் பம்ப் அமைத்தல்.13வது வார்டில் உள்ள சமுதாய கழிப்பறையில் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்.8 வது வார்டு சேவகம்பட்டி மெயின் ரோட்டில் சிறு பாலத்துடன் கூடிய வடிகால் அமைத்தல்.சேவுகம்பட்டி பேரூராட்சியில் உள்ள தார் சாலைகளில் பள்ளங்கள் மற்றும் குழிகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் அனைத்து வார்டு உறுப்பினர்களும் பேரூராட்சி பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

# பஞ்சகவ்யம் தயாரிப்புக்கு விவசாயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவிகள் நேரடி பயிற்சி!

கம்பம், அக். 06

தேனி மாவட்டம், கம்பம் வட்டம், சுருளிபட்டி கிராம த்தில், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன் கோயிலில் உள்ள கலசலிங்கம் பல்கலைக்கழகத்தின் இளங்கலை வேளாண் இறுதி ஆண்டு மாணவிகள் அ. மா. தர்ஷினி, ம. கிருத்திகா, பெ. மதுமிதா, அன்னபூர்ணா ம. பிள்ளை மற்றும் ஸ்ரீ. சிவப்பிரியா ஆகியோர் தங்களது துறை பேராசிரியர்கள் டாக்டர். M. ஜெயந்தி (பாட ஒருங்கிணைப்பாளர்) மற்றும் டாக்டர். I. ரபீனா (குழு ஒருங்கிணைப்பாளர்) ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், கம்பம் உதவி வேளாண்மை அலுவலர் கலீல் அவர்களின் அனுமதியுடன் விவசாயி களுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியில், பஞ்சகவ்யம் மற்றும் மீன் அமிலம் தயாரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு நடைமுறை பயிற்சி அளிக்கப்பட்டது.





மேலும், இயற்கை விவசாய முறைகள் மற்றும் உயிர்ச்சத்து உரங்களின் பயன்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டது.

அதேபோல், சுகழிபட்டி கிராமத்தில் முருங்கை தொழில் அதிபரிடம் நேர்காணல் நடத்தினர். இந்த நேர்காணலில், முருங்கை பயிரிடும் முறைகள், சந்தை நிலைமை, மதிப்பு கூட்டு தயாரிப்புகள், தொழில் தொடங்கும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து தொழில் அதிபர் விரிவாக பகிர்ந்துகொண்டார். மேலும், விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கம், வெளிநாட்டு ஏற்றுமதி, எதிர்கால வளர்ச்சி குறித்து மாணவிகள் கேள்விகளுக்கு பதில் கூறினார்.



# மதுரை மாவட்ட இளையர் சைக்கிளிங் அசோசியேசன் சார்பில் சைக்கிள் பந்தயம்!

மேலூர் அக்டோபர். 06

மதுரைமாவட்டஇளையர்சைக்கிளிங்அசோசியேசன் சார்பில் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கர்னல் பென்னிகுயிக் நினைவாக நடத்திய மதுரை மாவட்ட சைக்கிளிங் சாம்பியன்ஷிப் 2025 போட்டி வெள்ளலூர் விலக்கு சிவகங்கை ரோட்டில் நடைபெற்றது. இதில்11வயது, 14வயது, 16வயது, 18 வயது, 23 வயது உட்பட்டோருக்கான சைக்கிளிங் பந்தயம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகையும், வெற்றிச் சான்றிதழும் விழா குழுவினரால் வழங்கப்பட்டது. தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் தலைவர் எம். சுதாகர், பொதுச்செயலாளர் எம்.விக்னேஷ் குமார், பொருளாளர் டி.பழனி, தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் லைன் ஜி.கண்ண ன், மதுரை மாவட்ட இளைஞர் சைக்கிளிங் அசோசியேசன் தலைவர் பா.தெய்வேந்திரன், மதுரை மாவட்ட இளைஞர் சைக்கிளிங் அசோசியேசன் செயலாளர் ஆர். கெங்காதரன், மதுரை மாவட்ட இளைஞர் சைக்கிளிங் அசோசியேசன் பொருளாளர் எஸ்.செல்வம், மதுரை மாவட்ட இளைஞர்சைக்கிளிங்அசோசியேசன்துணைச் செயலாளர் ஜி.பிரபாகரன் ஆகியோர் சைக்கிளிங் பந்தயத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

# மேலூரில் திமுக பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்!

## எம்.பி.சிவா, அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்பு!!

மேலூர் அக்டோபர் 06

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனை படியும், கழக இளைஞரணி மாநில செயலாளரும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும்மதுரை வடக்கு மாவட்டம், மேலூர் தொகுதி திமுக பாகமுகவர்கள் (பிஎல்ஏ 2) ஆலோசனை கூட்டம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மேலூர் மூவேந்தர் பண்பாட்டு கழகத்தில் நடைபெற்றது.கூட்டதில் திமுக கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினரும், மேலூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளருமான திருச்சி சிவா, கலந்து கொண்டு பாக முகவர்கள் பிஎல்ஏ 2 அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட கழக அவை தலைவர் பாலசுப்பிரமணியன்,மேலூர் தொகுதி பார்வையாளர் வ.து.ந. ஆனந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் கரு. தியாகராஜன்,கழக இலக்கிய அணி துணைச்செயலாளர் நேரு பாண்டியன்,தலைமை கழக வழக்கறிஞர் அ.கலாநிதி, மேலூர் நகர் கழக செயலாளரும், நகர்மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் ஒன்றிய செயலாளர்கள் வல்லாளப்பட்டி பேரூர் கழகச் செயலாளர் குமரன், பொதுக் குழு உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, அப்பாஸ், புகழேந்தி, ஆனையூர் பகுதி செயலாளர் மருது பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் நாவினிப்பட்டி வேலாயுதம்,தற்காகுடி சரவணன், துணை அமைப்பாளர்கள் அட்டப்பட்டி குமார், கலைவாணன், குமரேசன், மற்றும் கொன்னடியான், புகழேந்தி, கிருஷ்ணமூர்த்தி,வழக்கறிஞர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் பி.எம்.கோகுல், வழக்கறிஞர் மாவட்ட தலைவர் மாலை முத்தன், துணை தலைவர் புகழேந்தி, மாவட்டதுணைஅமைப்பாளர்கள் சந்திரசேகர், கஷோர் குமார், ராஜேஷ், முகமது அசன், தாமு என்ற தாமோதரன்,மேலூர் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் ப.பிரபு,மற்றும் பாக முகவர்கள், கிளை செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள், கட்சி தொண்டர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# அ.வல்லாளபட்டியில் பால்குட உற்சவ விழாவை முன்னிட்டு மாட்டுவண்டி பந்தயம்!

மேலூர் அக். 06

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மத்தம் மேலநாடு வடக்கு தெரு அ. வல்லாளப்பட்டி நான்குவளவிற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு நாகரம்மாள்இளமநாயகிஅம்மன் கோவில் பால்குட உற்சவ விழாவை முன்னிட்டு 9ம் ஆண்டு மாபெரும் மாட்டு வண்டி பந்தயம்அ.வல்லாளப்பட்டி நடைபெற்றது. மாட்டுவண்டி பந்தயத்தை அ.வல்லாளபட்டி நான்கு வளவு அம்பலகாரர்கள் மற்றும் அம்பல இளைஞர்கள் துவக்கி வைத்தார். மாட்டுவண்டி பந்தயம் அ.வல்லாளப்பட்டி ரோடு முதல் அழகர் கோவில் வரை போட்டி நடைபெற்றது.பெரிய மாட்டு வண்டியில் 12 ஜோடிகள் கலந்து கொண்டன. முதல் பரிசு அ.வள்ளாளப்பட்டி பாரிதேவர் நினைவாக சித்துவா ஆனந்த் கரடி சாமி ஏ.ஆர்.பி பாண்டி அனுமந்தன் பட்டி இளங்கோவன் சூரக்குண்டு ஏஎஸ் பில்டர்ஸ், மற்றும் இரண்டாம் பரிசு அ.வள்ளாளப்பட்டி ஏ.ஆர்.கே ஆம்புலன்ஸ், நல்லாங்குடி முத்தையா சேர்வை மீனிகாந்தா சிவசோலை, மூன்றாம் பரிசு தேனி பண்ணைபுரம் ஜோசனா கொடிமங்கலம் திருப்பதி அம்பலம்நான்காம் பரிசு அ. வள்ளாள பட்டி ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை புது சுக்காம்பட்டி அனன்யா ஆகியோர் வெற்றி பெற்றனர். தொடர்ந்துசின்ன மாடு பிரிவில்29 வண்டிகள் கலந்து கொண்டன. சின்ன மாட்டின் பிரிவில்வெற்றி பெற்ற அனைத்து மாட்டின் உரிமையாளருக்கு பரிசு தொகையும், பரிசு கேடயம் விழாகுழுவினர்வழங்கினர். ரோட்டில் இருபுறமும் மாட்டுவண்டி பந்தய ரசிகர்கள் பந்தயத்தை கண்டுகளித்தனர். மாட்டு வண்டி பந்தயப் போட்டியை அ.வல்லாளப்பட்டி நான்குவளவு அம்பல இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

நாளை 6ந் தேதி அருள்மிகு நாகரம்மாள் இளமநாயகி அம்மன் கோவில் பால்குட உற்சவ விழா நடைபெறுகிறது. அன்று மாலை அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

### கோவில்பட்டியில் மாநில அளவிலான

# முதலமைச்சர் கோப்பைக்கான ஹாக்கி விளையாட்டுப் போட்டிகளை அமைச்சர் பி.கீதாஜீவன் துவக்கி வைத்தார்!

தூத்துக்குடி அக்.06

கோவில்பட்டியில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான ஹாக்கி விளையாட்டுப் போட்டிகளை அமைச்சர் பி.கீதா ஜீவன் துவக்கி வைத்தார். விழாவில் அவர் தெரிவித்ததாவது: முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. நமது மாவட்டத்தில் வெற்றி பெற்று தேர்ந்தேடுக்கப்பட்ட வீரர்கள் தஞ்சாவூர், சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நடைபெறுகின்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்க சென்றுள்ளனர். அதுபோல நமது மாவட்டத்திற்கு 38 மாவட்டத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் வருகை தந்துள்ளனர். கோவில்பட்டி ஹாக்கி விளையாட்டில் சிறந்து விளங்குகின்ற பகுதியாகும். கோவில்பட்டியை ஹாக்கிபட்டி என்றும் அழைக்கப்படும் நகரமாகும். நமது பகுதியைச் சார்ந்த மாரீஸ்வரன் இந்திய அளவிலான குழுவில் இந்தியாவிற்காக விளையாடிக் கொண்டிருக்கின்றார். மேலும், இந்த மைதானமும் விளையாட்டு வீரர்களின் வசதிக்கேற்ப நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அகில இந்திய அளவிலான ஹாக்கி ஜீனியர் போட்டி இங்கு நடைபெற்றது. அதற்கேற்ற வகையிலான மைதானம் இங்கு அமையப் பெற்றுள்ளது. எனவே, இங்கு வருகை தந்துள்ள அனைத்து வீரர்களையும் வருக என வரவேற்கிறோம். நல்ல முறையில் நீங்கள் பயிற்சி பெற்று வெற்றி பெற வேண்டும். வெற்றி வாய்ப்பு என்பது ஏதாவது ஒரு குழுவிற்கு தான் வரும். இருந்தாலும், இங்கு வருகைதந்துள்ள அனைத்து வீரர்களும் உங்கள் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளுங்கள். பிற வீரர்களுடன் ஒப்புமைபடுத்தி வருகின்ற காலங்களிலும் நன்றாக பயிற்சி எடுத்து, இன்னும் அதிகமாக திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். உங்களை நீங்களே முன்னேற்றிக் கொள்ள வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தலைமை வகித்தார். கோவில்பட்டி சார் ஆட்சியர் ஹிமான்ஷீ மங்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகைதந்துள்ள விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# ராஜபாளையத்தில் நலம் காக்கும் முதல்வர் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு!!

ராஜபாளையம் அக் 6

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் சேத்தூர்சேவுகபாண்டிஅரசுமேல்நிலைப் பள்ளியில் வைத்து நலம் காக்கும் முதல்வர் பல்நோக்கு மருத்துவ சிகிச்சை முகாம் துவங்கியது காலை முதல் முகாமில் கூட்டம் கூட துவங்கியது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மரு. என்.ஓசுகபுத்திராதலைமையில்மருத்துவ அதிகாரிகள் முன்னிலையில் முகாம் துவங்கியது. ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், ராஜபாளையம் நகர் மன்ற தலைவர் பவித்ரா ஷியாம், சீர்மரபினர் வாரிய துணைத் தலைவர் ராசா அருண்மொழி, நகர் மன்ற துணைத்தலைவர் கல்பனா, ராஜபாளையம் டி எஸ் பி பஸினா பிவி ஆகியோர் கலந்து கொண்டுமுகாமைதொடங்கிவைத்தனர். முகாமில் புது மருத்துவம் பல் .தோல். இருதய சிகிச்சைகள் மற்றும் பல்வேறு பரிசோதனைகள் மற்றும் பல்வேறு சிகிச்சைகளும் வழங்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு எத்தனை சதவீதம் என்பது அறிவிக்கப்பட்டது கருவுற்றிருக்கும் பெண்கள் பரிசோதனை செய்யப்பட்டு முழுமையான அளவு குழந்தை வளர்ச்சி குறித்து விளக்கி கூறப்பட்டது பல்வேறு நிலைகளில் உள்ள நோயாளிகள் பொதுமக்கள் ஆகியோருக்கு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்பட்டது ஏற்பாடுகளை ராஜபாளையம் நகர் மன்ற தலைவர் பவித்ரா ஷ்யாம், நகராட்சி ஆணையாளர் நாகராஜன் தலைமையில் நகராட்சி சுகாதார அலுவலர், துப்புரவு பணியாளர்கள் செய்திருந்தனர்.



# அம்பலூரில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

## மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி, க. தேவராஜ் எம். எல். ஏ. துவக்கி வைத்தனர்!!

வாணியம்பாடி அக் 6

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டாரம், அம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.சிவ சௌந்தரவள்ளி தலைமையில், திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினருமான க.தேவராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி முகாமை தொடங்கி வைத்து,

பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித் தார்கள். இந்த நி க ழ் ச் சி யி ல் , நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுடி, நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன், ஊராட்சிமன்ற தலைவர் எ . பி . மு ரு கே சன் , ஒன்றிய கவுன்சிலர் ஆர். பி.முரளி மற்றும் அரசு துறை அதி காரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## புதுக்கோட்டை அருகே

# முடிவுற்ற பல்வேறு திட்ட பணிகளை அமைச்சர் ரகுபதி தலைமையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை,அக்.6

புதுக்கோட்டை மாவட்டம் பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்தார். புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்ட ப் பணிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய பொது மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் ஊரகப் பகுதிகளுக்கு தேவையான, குடிநீர்வசதி, சாலை வசதி, சுகாதார வசதி, மின் வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இதையடுத்து பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வே று முடிவுற்ற திட்டப் பணிகளை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

பொ ன் ன ம ர ா வ தி ஊராட்சி ஒன்றியம், நகரப்பட்டி விநாயகர் திருக்கோவில் அருகில் உள்ள குளத்தை சுற்றி கட்டப்பட்டுள்ள தடுப்புச்சுவரினை பொதுமக் கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மேலும், நல்லூர் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சிறு மின்விசை மோட்டார் பம்பு, நல்லூர் ஊராட்சி, சுந்தரம்நகர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றையும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய நலத் திட்டங்களை பொதுமக்கள், மா ணாக்கர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்ப டுத்திக்கொள்ள வேண்டும்.

இந்நிகழ்வில், இலுப்பூர்வருவாய் கோட்டாட்சியர் கோகுல்சிங், பொன்னமராவதி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலசுப்ரமணியன்,

வெங்டேஷன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முத்து மற் றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## இமாச்சலப் பிரதேசம் சோலாரில் நடந்த தேசிய அளவிலான ஜூனியர் கிக் பாக்சிங் போட்டி:

# தமிழ்நாட்டைச் சேர்ந்த தேனி மாவட்ட மாணவர் வெண்கல பதக்கம் வென்று சாதனை!

ஆண்டிபட்டி, அக்.6

தமிழ்நாடு கிக் பாக்ஸிங் அசோசியேசன் கீழ் இயங்கும், தேனி மாவட்ட கிக் பாக்ஸிங் அசோசியேசனில் பயிற்சி பெற்ற திரிதேவ் என்ற மாணவன், 51 கிலோ எடை பிரிவில் தேசிய அளவிலான ஜூனியர் கிக் பாக்ஸிங் போட்டியில், பங்குபெற்று வெண்கல பதக்கம் பெற்றார்.

அவருக்கு தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ளகன்னியப்பபிள்ளை பட்டி கிக் பாக்சிங் அசோசியேசன்சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு தேனி மாவட்ட தமிழ்நாடு பாக்ஸிங் அசோசியேசன்தலைவர் மகாராஜன் தலைமை தாங்கினார். பயிற்சியாளர் துரைமுருகன் மற்றும் துணை பயிற்சியாளர்கள் நவீன், ஜெயவேல் ஆகியோர் வாழ்த்தினார்கள் . பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த ஆண்டிபட்டி நகர் மண்டல் தலைவர் எஸ். பி.எம் மனோஜ் குமார் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.இது குறித்து வெண்கல பதக்கம் வென்ற திரிதேவ் கூறியதாவது, தனக்கு பயிற்சி அளித்த பயிற்றுநர்கள் மற்றும் தனக்கு முன்னோடியாக இருந்த குடும்பத்தார்கள் மற்றும் ஊக்குவித்த அனைத்து நண்பர்களுக்கும் நன்றியை தெரிவித்தார் .சர்வதேச அளவில் வெற்றி பெற்று சாம்பியன் ஆக வேண்டும் என்பதே தனது லட்சியம் என்று கூறினார். மேலும் தேனி மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கில் இதற்கான பயிற்சி மையம் அமைக்க வேண்டும் என்றும், பயிற்சிக்கான உபகரணங்களை அரசு சார்பில் கொடுக்க வேண்டும் என்றும், தமிழ்நாடு துணை முதல்வரும், விளை யாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலினுக்கு வேண்டுகோள் விடுத்தார்.



இமாச்சலப் பிரதேசம் சோலாரில் நடந்த தேசிய அளவிலான ஜூனியர் கிக் பாக்சிங் போட்டி, தமிழ்நாட்டைச் சேர்ந்த தேனி மாவட்ட மாணவர் வெண்கல பதக்கம் வென்று சாதனை

# புதியம்புத்தூரில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆய்வு!!

தூத்துக்குடி அக்.06

புதியம்புத்தூரில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டார். ஓட்டப்பிடாரம் வட்டம் புதியம்புத்தூரில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமில், மருத்துவ பரிசோதனைக்காக வந்த பயனாளிகள் பதிவு செய்யும் அரங்கத்தினை மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா. ஆர்.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டார். இம்முகாமில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, சுகாதார அலுவலர் (கோவில்பட்டி) மரு. வித்யா, உதவி ஆட்சியர் ( ப யி ற் சி ) தி.புவனேஷ்ராம், உட்பட அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவில்பட்டியில் பா.ஜ.க நிர்வாகிக்கு இ மெயில் மூலமாக வெடிகுண்டு மிரட்டல்!

தூத்துக்குடி அக்.06

கோவில்பட்டி இந்திரா நகரைச்சேர்ந்தவர்தினேஷ் ரோடி, இவர் பா.ஜ.க தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞரணி தலைவராக இருந்தார். தற்போது எந்த பொறுப்பிலும் இல்லை. இவரது மனைவி சௌமியா, பா.ஜ.க வடக்கு மாவட்ட துணை தலைவராக உள்ளார். இந் நிலையில் தினேஷ் ரோடி இமெயிலுக்கு மர்ம நபர் ஒருவர்வெடிகுண்டு மிரட்டல் விடுத்து மெயில் அனுப்பியுள்ளார். அவரது வீட்டு பகுதியில் மூன்று ஆர்.டி.எக்ஸ் வெடிகுண்டு வைத்திருப்பதாகவும் மாலை 6 மணிக்குள் வெடிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து தூத்துக்குடி மாவட்ட வெடிகுண்டு கண்டறிதல், அகற்றல் பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் குமாரவேல் தலைமையிலான போலீசார் தினேஷ் ரோடி வீடு, அருகில் உள்ள கார்களில் சோதனை நடத்தினர்.



புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில், 'தி பெஸ்ட் வாக்கர்ஸ் கிளப்' சார்பில் பத்து ஆண்டுகள் முன்பு வைக்கப்பட்ட மரங்களுக்கு நன்றி செலுத்தும் திருவிழாவில் பிற்படுத்தப்பட்டோர்நலத்துறை அமைச்சர்சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார் .இந்த நிகழ்வில் மேயர் திலகவதி செந்தில் மாநகரச் செயலாளர் ராஜேஷ் முன்னாள் நகர செயலாளர் நைனா முகமது மற்றும் தி பெஸ்ட் வாக்கர்ஸ் கிளப்'உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## போச்சம்பள்ளி பகுதிகளில்

# பெருமாள் கோவில்களில் புரட்டாசி 3 ம் சனி சிறப்பு வழிபாடு!



போச்சம்பள்ளி,அக்.6

புரட்டாசி 3ம் சனிக்கிழமை ஒட்டி போச்சம்பள்ளி பகுதிகளில் உள்ள பெருமாள் கோவில்களில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அதேபோல் சந்தூர் அடுத்த மகாதேவ கொ ல் ல ஹ ள் ளி ஊராட்சியில் உள்ள தாதனூர் பகுதியில் அமைந்துள்ள திம்மராய பெருமள் கோவிலில் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி சமேத பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம்,

அலங்காரம் கோவில் தர்மகர்த்தா கணேசன் தலைமையில் பூஜைகள் செய்யபட்டு தீபாரதனை கா ன் பி க் க ப் ப ட் ட து . இதில் மாணிக்கம் சுகன்யா மகேந்திரன் சிவராஜ் குப்புசாமி சின்ன காளி விஜயராகவன் ஜெயராமன் சற்குணம் நந்தியம்மாள் ஜெயபால் முன்னிலை வகித்தனர் இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையாளர் ராமுவேலு சரக ஆய்வாளர் ராமமூர்த்தி செயல் அலுவலர் ரகுவர ராஜ்குமார் சக்திவேல் நாகலட்சுமி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துக்கொண்டு கோவிந்த, கோவிந்த என்று கோசமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர்.




## பட்டமளிப்பு விழா

தருமபுரி மாவட்டம், கடகத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில், அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரெ.சதீஸ், பட்டங்கள் வழங்கி, மாணவச்செல்வங்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். உடன் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்திரு.ஆ.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர்திரு.எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.தடங்கம் பெ.சுப்பிரமணி, தருமபுரி அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.D.K.சிவகுமார் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி, ஒண்ணப்பகவுண்டன அள்ளி ஊராட்சியில் உள்ள தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தில் விடுதலை போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவிடத்தில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.மணி ஆகியோர் மாலை அணிவித்து, மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள். உடன் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.கே.மணி அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.தடங்கம் பெ.சுப்பிரமணி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.லோகநாதன், பென்னாகரம் வட்டாட்சியர் திரு.சண்முகசுந்தரம், பாப்பாரப்பட்டி பேரூராட்சித்தலைவர் திருமதி.பிருந்தா, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## வாணியம்பாடியில் நேற்று இரவு பெய்த கன மழை:

# அரசு மருத்துவமனை வளாகத்தில் மழை நீர் குளம் போல் தேங்கியுள்ளதால் மருத்துவர்கள், செவிலியர்கள்,நோயாளிகள் பாதிப்பு!

வாணியம்பாடி, அக்.6

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று நள்ளிரவு முதல் விடிய விடிய கன மழை பெய்தது. இதன் காரணமாக ஜமாத் ரோடு, நூருல்லாபேட்டை மற்றும் அரசு மருத்துவ மனை வளாகத்தில் மழை நீர் குளம்போல் தேங்கியுள்ளது. இதனால் மருத்துவமனைக்குள் செல்ல மருத்துவர்கள், செவிலியர்கள், நோயாளிகள் மிகவும் சிரமப்பட்டு வந்ததால் உடனடியாக மாற்று பாதை வழியாக மருத்துவ மனைக்கு உள்ள செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.மேலும் நூருல்லா பேட்டை குடியிருப்பு பகுதியில் வீடுகளுக்கு முன்பாக சாலைகளில் கழிவு



நீருடன் மழை நீர் தேங்கி நின்று உள்ளதால் பகுதி மக்கள் வீட்டை விட்டு வெ ளி யே ற சிரமப்பட்டனர்.தேங்கி உள்ள மழை நீர் வெளியேற்ற நகராட்சி பணியாளர்கள் மின் மோட்டார் மற்றும் ஜே.சி.பி இயந்திரம் கொண்டு மழை நீர்அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். மழை பெய்யும் போதெல்லாம் இது போன்ற சிரமம் ஏற்பட்டு வருவதால் அப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி தடையின்றி மழை நீர் செல்ல வழிவகை செய்ய வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## ஆம்பூர் அருகே

# விவசாய நிலத்தில் வீசப்படும் மதுபான பாட்டில்கள், பிளாஸ்டிக் பொருட்களால் சுகாதார சீர்கேடு!

## வட்டாச்சியரிடம் வாக்குவாதத்தில் ஈடுப்பட்ட கிராம மக்கள்!!

ஆம்பூர்.அக்.6

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மின்னூர் கிராமத்தில் உள்ள அரசு மதுபான கடையை அகற்றக்கோரி, கிராம மக்கள்மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்த நிலையில்,

நேற்று மதுபான கடையை அகற்றுவது தொடர்பாக ஆம்பூர் வட்டாச்சியர் ரேவதி மற்றும் ஆம்பூர் கிராமிய காவல் துறையினர் மின்னூர் பகுதியில் ஆய்வு மேற்க் கொண்ட கொண்டனர். அப்போது அங்கு வந்த கிராம மக்கள், மதுபான கடையினால், அவ்வழியாக செல்லக்கூடிய பெண்கள் மற்றும் பள்ளி மாணவர்கள்மிகுந்த அவதிக்குள்ளாகுவதாகவும், குடி மகன்கள்



மதுபானங்களை குடித்துவிட்டு பாட்டில்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை அப்பகுதியில் உள்ள விவசாய நி ல த் தி லே யே வீ சி ச் செல்வ தால், சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.அதனால் இப்பகுதியில் உள்ளமதுபானகடையை உடனடியாக அகற்ற வேண்டும் என்று கூறி வட்டாட்சியர் மற்றும் காவல்துறையினரிடம் வாக்குவாதத்தில் ஈடுப் பட்டனர். இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் enruவஉறுதிய ளித்தின் பேரில் பொது மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்,

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 2025–2026ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான செஸ் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மற்றும் சேலம் மாநகராட்சி மேயர் ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் சேலம், நேரு கலையரங்கில் தொடங்கி வைத்தார்கள். உடன் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் சாரதாதேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, மண்டல குழுத் தலைவர் உமாராணி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவரஞ்சன் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அட்டவணைப் பிடாரியூர், மேலப்பாளையம் பகுதியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தியாகி கொடிகாத்த குமரனுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணியினை, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார் உட்பட பலர் உள்ளனர்.




சுதந்திர போராட்ட வீரர் கொடிகாத்த குமரன் 122வது பிறந்த நாளையொட்டி வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் ஈரோடு மாவட்டம், சென்னிமலைபேரூராட்சி,தியாகிகொடிகாத்தகுமரன்பிறந்தஇல்லத்தில்வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார் உட்பட பலர் உள்ளனர்.

## குன்னூர்சிம்ஸ் பூங்காவில் உள்ள மரத்தில்
# ருத்ராட்சை காய்க்க தொடங்கியுள்ளதை ஆர்வத்துடன் கண்டு ரசித்த சுற்றுலாப் பயணிகள்!

நீலகிரி,அக்.6

குன்னூர்சிம்ஸ் பூங்காவில் நேபாளத்தை தாயகமாக கொண்ட ருத்ராட்சை மரங்கள் கடந்த 1948ஆம் ஆண்டு நடவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எலியோகார்பஸ் கனிட்ரஸ் என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட இந்த மரத்தில் ஒன்று முதல் 21 முகங்கள் கொண்ட ருத்ராட்சை காய்கள் விளைவது வழக்கம். இதில் 5 முகங்கள் கொண்ட ருத்ராட்சை கொட்டைகளை பலரும் அணிவது வழக்கம். இந்நிலையில் குன்னூர்சிம்ஸ் பூங்காவில் உள்ள 3 மரங்களில் ருத்ராட்சை காய்கள்



கொத்துகொத்தாக தற்போது காய்த்து தொங்குகின்றன. ஒரு காய் ரூ.10 முதல் ரூ.30 வரையிலும், அரிய வகை காய்கள் ரூ.500 முதல் ரூ.1,000 வரையிலும் விற்கப்படுகின்றன.

மரத்தில் இருந்து விழும் காய்களை உள்ளூர்வாசிகள் சேகரித்து மாலையாக கோர்த்து சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். இந்த மரங்களை சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் கண்டு செல்கின்றனர்."



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சென்னிமலை பேருந்து நிலையம் அருகில் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையின் சார்பில் நடைபெற்ற தலைக்கவசம் (Helmet) அணிதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தலைக்கவசம் அணிந்த வாகன ஓட்டுநர்களை பாராட்டி, இனிப்பு வழங்கி, பேசினார்.

## பாவூர்சத்திரம் அருகே
# கார் மோதி முதியவர் பலி!

பாவூர்சத்திரம், செப். 6

பாவூர்சத்திரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட திரவியநகரில் கார் மோதி முதியவர் உயிரிழந்தார்.

திரவியநகர் பலவேசமுத்து மகன் ராம நாடார் (வயது 78) இவர் தனது வீட்டின் அருகே கடைக்கு சென்று வீடு திரும்பியதாக கூறப்படுகிறது. அப்போது தென்காசியில் இருந்து கடையம் செல்வதற்காக தனது காரில் புளியங்குடி ஜின்னா நகரைச் சேர்ந்த சிக்கந்தர் மகன் முகமது அலி காரை ஓட்டி வந்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக முதியவர் ராமநாடார் மீது கார் மோதியதாக கூறப்படுகிறது. இதனால் காயமடைந்த முதியவரை உடனே அவர் தனது காரிலேயே சிகிச்சைக்காக கூட்டிச்சென்று தென்காசி தனியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளார். தலையில் காயம் ஏற்பட்டுள்ளதால் மருத்துவமனையில் ஸ்கேன் எடுத்துவிட்டு வரும்படி கூறியுள்ளனர். அப்போது ஸ்கேன் எடுத்து விட்டு மீண்டும் மருத்துவமனைக்கு திரும்பியுள்ளனர். ஆனால் வரும் வழியிலே முதியவர் ராமநாடார் இறந்துள்ளார். இது குறித்து பாவூர்சத்திரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



பொள்ளாச்சி அடுத்துள்ள ஆனைமலை மாசாணியம்மன் கோவிலில் மாசாணி பிக்சர்ஸ் சார்பில் ராஜசேகரன் தயாரிப்பில் கேத்தரின் இயக்கத்தில் விமல் புதுமுக நடிகை சங்கீதா நடிக்கும் வடம் பூஜை நடைபெற்றது இதில் இன்று வடம் திரைப்பட காட்சிகள் நிறைவு பெற்றதை ஒட்டி ஆனைமலை மாசாணியம்மன் கோவிலில் சிறப்பு பூஜை செய்து அம்மனை வழிபட்டனர் பின்னர் நடிகர் விமலை கோவிலுக்கு வந்த பக்தர்கள் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்

## சங்கரன்கோவில்
# நகராட்சி மார்க்கெட்டில் தகராறு செய்தவர் கைது!

நெல்லை அக் 06



நெல்லை மாவட்டம் சங்கரன் கோவில் நகராட்சிக்கு உட்பட்ட தினசரி காய்கறி மார்க்கெட்டில்கடையில் வேலை செய்த உடப்பன்குளம் முருகன் மகன் சுப்பிரமணியன் என்பவரை இருமன்குளம் தங்கபாண்டியன் மகன் மருது என்ற மருத பாண்டியன் அவர்கள் ஏற்பட்ட தகராறு மருத பாண்டி என்பவர் காய்கறி கடையில் இருந்த கத்தியை எடுத்து சுப்பிரமணியை வெட்டியதாக வழக்கு பதிவு செய்து வழக்கின் மருதி என்ற மருதபாண்டியன் என்பவரை ஆய்வாளர் பாலமுருகன் தலைமையில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.

## ஆலங்குளத்தில்
# பெண்களுக்கு எதிராக காணொளி வெளியிட்டவர் கைது!

தென்காசி, அக்.6



தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தில் பெண்கள், மற்றும் பெண்குழந்தைகளுக்கு எதிராக சமூக வலைதளத்தில் காணொளி வெளியிட்ட நபரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

ஆலங்குளம் அம்பை ரோடு பகுதியைச் சேர்ந்தவர் முத்துராஜ் மகன் திலீபன ;(35). இவர் தனது சமூக வலைதள பக்கத்தில் பெண்கள் குறித்து ஆபாசமாகவும், பெண் குழந்தைகள் அதிகமாக பிறப்பதால் பெற்றோர் சோகத்தில் இருப்பதாவும், அதனால் கருவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா எனக் கண்டறிந்து பார்க்கும் உரிமையை பெற்றோர்களுக்கு வழங்க வேண்டும் என பெண் சிசுக் கொலைக்கு ஆதரவாகவும் பேசி வீடியோ வெளியிட்டாராம். இது குறித்து சைபர் க்ரைம் இணையத்தில் புகார்கள் வந்ததையடுத்து, தென்காசி சைபர் க்ரைம் போலீஸார் வழக்குப் பதிந்து அவரைக் கைது செய்தனர். தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைத்தனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தெப்பக்காடு பந்திப்பூர்சாலையில் உலா வரும் காட்டு யானைகள்!

ஊட்டி,அக்.6



தொடர்விடுமுறை காரணமாக நீலகிரி மாவட்டத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. இந்நிலையில், முதுமலை புலிகள் காப்பகம் அருகே உள்ள தெப்பக்காடு பந்திப்பூர்சாலையில் வாகனங்களின் எண்ணிக்கை வெள்ளி க்கிழமை அதிகரித்து காணப்பட்டது.

இந்நிலையில், வனப் பகுதியில் இருந்து வெளியேறிய இரண்டு காட்டு யானைகள் சாலையில் சென்று கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகளின் வாகனத்தை கண்டதும் ஆக்ரோஷத்துடன் துரத்தின. இதனால் பல வாகனங்கள் பின்னோக்கி இயக்கப்பட்டன. சிறிது நேரத்தில் யானைகள் சாலையில் இருந்து மீண்டும் வனப் பகுதிக்குள் சென்றன. யானை துரத்தியதால் சுற்றுலா வாகன ஓட்டிகள் அச்சமடைந்தனர்."



சிவகங்கை மாவட்டம் கீழடியில் அகழாய்வு பணியின் போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தினை மாநில முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு அங்கு வருகை தந்த மாணவ, மாணவிகளிடம் கலந்துரையாடினார் உடன் அமைச்சர்கள், ஆட்சித் தலைவர், எம்.எல்.ஏக்கள் மற்றும் பலர் உள்ளனர்



தென்காசி மாவட்டம் குற்றாலம் மெயின் அருவியில் மிதமான அளவில் கொட்டும் தண்ணீரில் குளித்து மகிழும் சுற்றுலா பயணிகள் .



## கல்லிடைகுறிச்சி அருகே
# பழைய பாலத்தை இடிக்க பொதுமக்கள் எதிர்ப்பு!
## புதிய பாலம் அமைக்க கோரிக்கை!!

அம்பை, அக் 6

பழைய பாலத்தை அதிகாரிகள் இடிக்க வந்த நிலையில் பொதுமக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள திம்மராஜபுரம் என்ற பகுதியில் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

கல்லிடைக்குறிச்சி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான விவசாய நிலங்களும் இப்பகுதியில் தான் அமைந்துள்ளது. இந்த பகுதிக்கு செல்லும் வழியில் கண்ணடியன் கால்வாயின் குறுக்கே தரைமட்ட அளவில் பழமையான பாலம் அமைக்கப்பட்டிருந்தது. மழை வெள்ள காலங்களில் கால்வாயிலிருந்து உபரி நீரை திசையன்விளை, இராதாபுரம் போன்ற வரண்ட பகுதிக்கு கொண்டு செல்லுதல் உள்ளிட்ட தேவைகளுக்காக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சற்று உயரமாக புதிய பாலம் அமைக்கப்பட்டது.

இதனால் பொதுமக்கள் நலன்கருதி பழைய பாலத்தை இடிக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அப்பகுதியினர் இந்த புதிய பாலத்தின் வழியாக நெல் அறுவடை இயந்திரம் மற்றும் விவசாயிகள் அறுவடை செய்த நெல், வைக்கோல் உள்ளிட்டவற்றை எடுத்துச் செல்ல முடியாத நிலை உள்ளது.

மேலும் பாலம் கட்டுவதில் முறைகேடும் ஏற்பட்டுள்ளது.

எனவே எங்கள் பகுதிக்கு வேறு பாலம் அமைத்து தந்துவிட்டு இந்த பழைய பாலத்தை இடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இருப்பினும் திடீரென சேரன்மகாதேவி சார் ஆட்சியர் முன்னிலையில் பொக்லைன் இயந்திரத்துடன் அதிகாரிகள் திம்மராஜபுரம் பகுதிக்கு வந்தனர்.

அப்போது விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அந்த பாலத்தில் நின்று பழைய பாலத்தை இடிக்க கூடாது புதிய பாலம் அமைத்து தர எழுத்து வடிவில் உத்தரவாதம் அளித்த பின்னரே இடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து முற்றுகை யிட்டனர்.

இதனால் அதிகாரிகள் பாலத்தை இடிக்கும் முடிவை தற்போது கைவிட்டு சென்றுள்ளனர். இச்சம்பவம் கல்லிடைக்குறிச்சி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சிவகங்கை அருகே நாட்டரசன் கோட்டையில் உள்ள பிரசன்ன வெங்கடாஜலபதி கோவிலில் புரட்டாசி பிரம்மோற்ஸவ தேரோட்ட விழா நடைபெற்றது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பெருமாளை தரிசனம் செய்தனர்